1992 பிப்ரவரி 6]

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரில் பால் விநியோகம், பால்வளக் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது வீடுகளுக்கு விநியோகத்திற்காக வரும் பாலை தனியார் ஹோட்டல்களுக்கு ஆயிரக் கணக்கான லிட்டர் பாலை அதிக விலைக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதிகாலையிலே பால் வாங்குவதற்குப் பால் பூத்துக்கு சென்றால், பால் தீர்ந்துவிட்டது என்று பதில் சொல்கிறார்கள். பால் வாங்க வரும் பெண்களைத் தரக் குறைவான வார்த்தைகளால் பேசுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்கவும், முறையாக பால் பொது மக்களுக்குக் கிடைக்கவும், சென்னை மாநகரிலுள்ளதுபோல் தானியங்கி பால் நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை தனிக் குழுவாக அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இது போன்ற குறைகள் ஏற்படாவண்ணம் அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் பூத்துகளுக்கு பால் வாங்க வரும் பெண்களைத் தரக் குறைவாகப் பேசுகின்ற காரணத்தால், அந்த பால் பூத்துகளில் பணியாற்றுவதற்கு பெண்களையே அமர்த்துவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

4. அறிக்கைகள் அளித்தல்.

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திரு. மா. சுந்தரதாஸ்.